இளையராஜாவின் மகள் பாடகி பவதாரணி காலமானார்

சென்னை, ஜன. 25: இசையமைப்பாளர் இளையராஜாவின் மகளும், பின்னணிப் பாடகியுமான பவதாரணி (47) உடல் நலக்குறைவு காரணமாக இலங்கையில் வியாழக்கிழமை காலமானார். பவதாரணி உடல்நலப்பாதிப்புக்காக கடந்த 5 மாதங்களுக்கும் மேலாக இலங்கையில் ஆயுர்வேத மருத்துவ சிகிச்சை மேற்கொண்டு வந்தார்.

பவதாரணி

சென்னையில் பிறந்த பவதாரணி தொடக்கம்முதலே, தந்தை இளையராஜா, சகோதரர்கள் கார்த்திக்ராஜா, யுவன் ஷங்கர் ராஜா ஆகியோரின் இசைப் பணிகளில் இணைந்து பயணித்து வந்தார்.

இளையராஜா இசையமைத்த 'ராசய்யா' திரைப்படத்தில் பின்னணிப் பாடகியாக பவதாரணி அறிமுகமானார். இவர் பாடிய 'மஸ்தானா மஸ்தானா' என்ற பாடல் பெரிய வரவேற்பைப் பெறவே, தொடர்ந்து தனது தந்தை, சகோதரர்கள் இசையமைப்பிலும், தேவா, சிற்பி உள்ளிட்டோரின் இசையமைப்பிலும் பாடினார்.

நடிகை ரேவதி இயக்கிய 'மித்ர மை ஃபிரண்ட்' என்ற படம் மூலம் இசையமைப்பாளராக பவதாரணி அறிமுகமானார். பின்னர், இவர் தெலுங்குப் பட உலகில் நுழைந்தார்.

இவரது குரலின் தனித்தன்மையே, பவதாரணியை தனியாக அடையாளப்படுத்திக் காட்டிவிடும். 'அழகி' திரைப்படத்தில் இவர் பாடிய 'ஒளியிலே தெரிவது தேவதையா....' என்ற பாடல் மிகப் பெரிய வரவேற்பை பெற்றது. தொடர்ந்து, இவர் பாடிய பல பாடல்கள் பெரும் வரவேற்பைப் பெற்றன.

இளையராஜா இசையில் 'பாரதி' திரைப்படத்தில் இடம் பெற்ற 'மயில் போல பொண்ணு ஒன்னு...' பாடலுக்காக பவதாரணிக்கு தேசிய விருது கிடைத்தது.

ஹிந்தி படத்துக்கும் இசை அமைத்துள்ளார். தமிழில் 'இலக்கணம்', 'அமிர்தம்', 'வெள்ளச்சி' போன்ற திரைப்படங்களுக்கும் இசையமைத்திருக்கிறார்.

இவர் சபரிராஜ் என்பவரை திருமணம் செய்து கொண்டார்.

வரும் சனிக்கிழமை இசை நிகழ்ச்சி நடத்துவதற்காக இளையராஜாவும் இலங்கையில்தான் இருக்கிறார். பவதாரணி உடல் வெள்ளிக்கிழமை சென்னை கொண்டு வரப்படுகிறது.

கல்வி, சுகாதாரத்தை அடிப்படை உரிமையாக்க வேண்டும்

ப.சிதம்பரத்திடம் கல்வியாளர்கள் வலியுறுத்தல்

சென்னை, ஜன. 25: நாட்டின் வளர்ச்சிக்கு கல்வியையும், சுகாதாரத்தையும் அடிப்படை உரிமையாக மாற்ற வேண்டும் என்று முன்னாள் மத்திய அமைச்சரும், காங்கிரஸ் தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவின் தலைவருமான ப.சிதம்பரத்திடம் கல்வியாளர்கள் உள்பட பல்வேறு துறை வல்லுநர்கள் வலியுறுத்தினர்.

காங்கிரஸ் தேர்தல் அறிக்கைக்கான கருத்துக் கேட்பு கூட்டம் தேனாம்பேட்டையில் உள்ள காமராஜர் அரங்கில் வியாழக்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு ப.சிதம்பரம் தலைமை வகித்தார். காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி, தேர்தல் அறிக்கைக் குழு உறுப்பினர் பிரவீன் சக்கரவர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வி.ஐ.டி. பல்கலைக்கழக வேந்தர் ஜி.விஸ்வநாதன், கல்வியாளர் பிரின்ஸ் கஜேந்திர பாபு, தென்னிந்திய திருச்சபை பேராயர் தேவசகாயம், வங்கி ஊழியர் சம்மேளன தலைவர் வெங்கடாசலம் உள்பட விவசாய அமைப்பினர், பிற்படுத்தப்பட்டோர் கூட்டமைப்பினர், சிறு குறு தொழில் கூட்டமைப்பினர், தன்னார்வலர்கள், ரயில்வே தொழிலாளர்கள், அமைப்புசாரா தொழிலாளர்கள் உள்பட பல்வேறு தொழிற்சங்க பிரதிநிதிகள், வணிகர் அமைப்பினர், மாற்றுத்திறனாளிகள் அமைப்பினர் பங்கேற்று கருத்துகளை முன் வைத்தனர்.

கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட அம்சங்கள்: கல்வியை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வர வேண்டும். கல்வி, சுகாதாரத்தை அடிப்படை உரிமையாக மாற்ற வேண்டும். ஆராய்ச்சிப் படிப்புக்கான நிதியை மத்திய அரசு அதிகரிக்க வேண்டும்.

அரசுப் பள்ளிகளின் கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும். 5 ஆண்டு திட்டக் குழுவை மீண்டும் கொண்டு வர வேண்டும். குறுந் தொழில்கள், புத்தாக்கத் தொழில் நிறுவனங்களுக்குத் தனி அமைச்சகம் ஏற்படுத்த வேண்டும். தொழில்களுக்கு இணையதள வசதி மூலம் கடனுதவி வழங்க வேண்டும்.

தகவல் அறியும் உரிமை சட்டத் தகவல்கள் வெளிப்படைத்தன்மையுடன் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். பொதுத் துறை நிறுவனங்கள் மூலமாக மருந்துப் பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும். குடியுரிமை திருத்தச் சட்டத்தின்போது கைது செய்யப்பட்ட இஸ்லாமியர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் உள்பட பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

தமிழக காங்கிரஸ் நிர்வாகிகளும் அவர் தரப்பு கருத்துகளை முன் வைத்தனர்.

காங்கிரஸ் முன்னாள் தலைவர்கள் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், திருநாவுக்கரசர், சிறுபான்மையினர் நல ஆணைய தலைவர் பீட்டர் அல்போன்ஸ், துணைத் தலைவர் கோபண்ணா உள்பட பலர் கூட்டத்தில் பங்கேற்றனர்.

நாளை மருத்துவப் பல்கலை. பட்டமளிப்பு விழா

சென்னை, ஜன. 25: தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தின் 36-ஆவது பட்டமளிப்பு விழா சனிக்கிழமை (ஜன.27) நடைபெறுகிறது.

தமிழக ஆளுநரும், பல்கலைக்கழகத்தின் வேந்தருமான ஆர்.என்.ரவி தலைமையில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில், புதுச்சேரி ஜிப்மர் மருத்துவக் கல்லூரி இயக்குநர் ராகேஷ் அகர்வால் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்கிறார். அமைச்சர் மா.சுப்பிரமணியன், பல்கலைக்கழக துணைவேந்தர் கே.நாராயணசாமி, பதிவாளர் அஸ்வத் நாராயணன் உள்ளிட்டோர் அந்த நிகழ்வில் கலந்துகொள்கின்றனர். நிகழாண்டில் மொத்தம் 29,685 பேர் பட்டம் பெறுகின்றனர்.

இதில், நேரடியாக 134 பேருக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி பட்டங்களை வழங்குகிறார்.

பட்டமளிப்பு விழா நிகழ்ச்சிகள், www.tnmgrmu.ac.iவ் என்ற இணையதளத்தில் நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

தங்கம் விலை பவுனுக்கு ரூ. 40 சரிவு

சென்னை, ஜன. 25: சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை பவுனுக்கு ரூ. 40 குறைந்து ரூ. 46,640-க்கு விற்பனையானது.

கடந்த சில நாள்களாக சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை தொடர்ந்து உயர்ந்து வந்த நிலையில், வெள்ளிக்கிழமை பவுனுக்கு ரூ. 40 குறைந்துள்ளது.

ஆபரணத்தங்கத்தின்விலை கிராமுக்கு ரூ. 5 குறைந்து ரூ. 5,830-க்கும், பவுனுக்கு ரூ. 40 உயர்ந்து ரூ. 46,640-க்கும் விற்பனையானது.

வெள்ளி விலை கிராமுக்கு 70 காசுகள் உயர்ந்து ரூ.77.50-க்கும், ஒரு கிலோ (கட்டி வெள்ளி) ரூ. 700 உயர்ந்து ரூ.77,500-க்கும் விற்பனையானது.

பணிப்பெண் சித்ரவதை வழக்கு: திமுக எம்எல்ஏவின் மகன், மருமகள் கைது

சென்னை, ஜன. 25: பணிப்பெண்ணை சித்ரவதை செய்த வழக்கில், பல்லாவரம் தொகுதி திமுக எம்எல்ஏ கருணாநிதியின் மகன் ஆண்டோ மதிவாணன், மருமகள் மெர்லினா ஆகியோரை தனிப்படை போலீஸார் ஆந்திர மாநிலத்தில் கைது செய்தனர்.

பல்லாவரம் திமுக எம்எல்ஏ கருணாநிதியின் மகன் ஆண்டோ மதிவாணன். இவர், திருவான்மியூர் தெற்கு அவென்யுவில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் மனைவி மெர்லினாவுடன் வசித்து வருகிறார். இவரது வீட்டில் கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர் பேட்டையைச் சேர்ந்த 18 வயது இளம் பெண் ஒருவர் 6 மாதங்களுக்கு முன்னர் பணிப் பெண்ணாக வேலைக்குச் சேர்ந்தார்.

தன்னை மெர்லினாவும், அவரது கணவரும் தாக்கி கொடுமைப் படுத்தியதாக அந்தப் பெண் புகார் கூறினார்.

இது தொடர்பாக நீலாங்கரை அனைத்து மகளிர் காவல் நிலைய போலீஸார் விசாரணை நடத்தி, ஆண்டோ மதிவாணன், மெர்லினா ஆகியோர் மீது தாழ்த்தப்பட்டோருக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டம் உள்பட 4 பிரிவுகளின் கீழ் ஜன.18-ஆம் தேதி வழக்குப் பதிவு செய்தனர். கைதாகும் நிலை இருந்ததால் இருவரும் தலைமறைவாகினர்.

இந்த நிலையில், இருவர் தரப்பிலும் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதன்படி, அவர்கள் சரணடைந்தால் அன்றைய தினமே ஜாமீன் கிடைக்க சட்டப்படி விசாரணை நீதிமன்றம் பரிசீலிக்கலாம் என்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த நிலையில், ஆந்திர மாநிலத்தில் பதுங்கி இருந்த ஆண்டோ, மெர்லினா ஆகிய இருவரையும் போலீஸார் வியாழக்கிழமை கைது செய்தனர். போலீஸார் அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சட்ட நடவடிக்கைகளை எடுப்பார்கள்.

இந்த நிலையில், பாதிக்கப்பட்ட இளம்பெண்ணுக்கு ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் மருத்துவ பரிசோதனைகள் செய்யப்பட்டன.

பெருநகர சென்னை மாநகராட்சி
பேருந்து சாலைகள் துறை

பே.சா.து.ந.க.எண்.பி4/0322/2024

குறுகிய கால மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை
கீழ்கண்ட பணிகளுக்கு மின்னனு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது

பணியின் விவரம்	பணியின் மதிப்பு தோராயமாக 18% GST சேர்த்து ரூ. இலட்சங்களில்	முன் வைப்புத் தொகை	பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை
Improvements to the 145 nos of Interior BT, CC & ILP roads in zones - I, XIV & XV under SFC (2023 - 24) Scheme & (12 சிப்பங்கள்)	குறைந்த பட்ச பணியின் மதிப்பு ரூ.164.00 இலட்சங்கள் அதிகபட்ச பணியின் மதிப்பு ரூ.177.00 இலட்சங்கள்	பணியின் மதிப்பில் 1 சதவீதம்	முதல் வகுப்பு

1. ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் **31.01.2024 மாலை 3.00 மணி**
2. ஒப்பப் படிவங்கள் **http://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
3. இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **01.02.2024 மாலை 3.30 மணி**

செ.ம.தொ.இ / 431 / ஒப்பந்தப்புள்ளி / 2024 **கண்காணிப்பு பொறியாளர் / பே.சா.து**

பெருநகர சென்னை மாநகராட்சி
மண்டலம் - 4

ம.அ.4ந.க.எண்.பி3/8836/2023

E - ஒப்பந்தப்புள்ளிகள்

மண்டலம்-4ல் ஒரு பணிக்கு மண்டல அலுவலர் - 4 அவர்களால் ஒப்பந்தம் வரவேற்கப்படுகின்றது.

மறு ஒப்பம் - மூன்றாவது அழைப்பு மண்டலம் - 4, பகுதி - 09, வார்டு - 34 காமராஜர் சாலையில் உள்ள சென்னை உயர்நிலைப்பள்ளியை புதுப்பிக்கும் பணி (நமக்கு நாமே திட்டம்) - பணிக்கான மதிப்பு - ரூ.69.85 இலட்சம்

ஒப்பந்ததாரர்கள் https://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யலாம். ஒப்பம் பதிவேற்றம் செய்யும் நாள் மற்றும் நேரம் - 08.02.2024 அன்று மாலை 3.00 மணி வரை, ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 09.02.2024 அன்று மாலை 3.30 மணிக்குள் ஒப்பந்தங்கள் திறக்கப்படும்.

செ.ம.தொ.இ / 434 / ஒப்பந்தப்புள்ளி / 2024 **மண்டல அலுவலர் -4**

SBI பாரத ஸ்டேட் வங்கி, SARB, கோயம்புத்தூர்,
377/1, டாக்டர் நஞ்சப்பா சாலை, என்.எஸ்.பழனியப்பா முதியோர் இல்லம் பின்புறம், கோயம்புத்தூர்-641018. Ph:0422-2233450. Email ID: sbi.10204@sbi.co.in

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் விவரங்கள்:
பெயர்: திரு.D.பார்த்தசாரதி. அலைபேசி எண்: 9442511297

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு திரி சொத்துக்களின் பாதுகாப்பு மற்றும் மறு கட்டமைப்பின் கீழ், மற்றும் பாதுகாப்பு நலன்கள் அமலாக்க சட்டம் 2002 (சர்ஃபேசி) கீழ் பாதுகாப்பு நலன் (அமலாக்க) விதிகள் 2002-ன் கீழ் விதி 8(6) உடன் படிக்கப்பட்டது.

இதன் மூலம் பொது மக்களுக்கும், குறிப்பாக கடன் வாங்கியவர்களுக்கும் மற்றும் கடன் உத்தரவாதம் அளித்தவர்களுக்கும் அறிவிக்கப்படுவது பதிவிடப்படுத்தப்பட்ட கடனாளியிடம் அமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களின் ஆக்கப்பூர்வமான உடைமையை **பாரத ஸ்டேட் வங்கியின்** (பதிவிடப்படுத்தப்பட்ட கடனாளர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் எடுக்கப்பட்டு 23.01.2024 அன்று நிலுவையில் உள்ள கடன் தொகையான ரூ.1,58,85,823/- (ரூபாய் ஒரு கோடி அறுபத்தெட்டு லட்சம் எண்ணாறாயிரத்து எண்ணூற்று இருபத்தி ஒன்று மட்டும்) அதனுடன் கூடுதல் வட்டியும் செலவுகளையும் கடன் வாங்கியவர்கள் மற்றும் கடன் உத்தரவாதம் அளித்தவர்களிடமிருந்து: M/s.Diyas Techno Fabs, (கடன் வாங்கியவர்) SF No.647, 1A/3B, L&T பைபாஸ் ரோடு, L&T வளாகம் எதிரில், வடக்குதோட்டம், கோயம்புத்தூர்-641021. Shri.M.T. Maheshbabu, (பங்குதாரர்/உத்திரவாதம் அளித்தவர்) த.பெ.திரு.E.துரைசாமி, 13/13A, நவீனவரதுகோனார் தெரு, குனியமுத்தூர், கோயம்புத்தூர்-641008, Smt.G.Jayalakshmi. (பங்குதாரர்/உத்திரவாதம் அளித்தவர்) க.பெ.ஸ்ரீ.முனிநாதன், நா எண்:13, ராமியங்க லேஆவுட், சொரிபாளையம் சாலை, கோயம்புத்தூர்-641028, Smt.G.Vijayalakshmi.(உத்தரவாதம் அளித்தவர்) க.பெயரைந்த திருகோவிந்தராஜுலு, பிளாட் எண்:E1, மல்லாலியா RC லொரம், 7/992, நூக்கம்பாளையம் பிரதான சாலை, பெரும்பாக்கம், சென்னை-600100. ஆகியோரிடமிருந்து மீட்க வரும் 20-02-2024 அன்று "As is where is", "As is what is", "Whatever there is" என்ற நிலையில் மின்-ஏல விற்பனை செய்யப்படும். இருப்பு விலை மற்றும் முன்வைப்பு தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

அசையா சொத்துக்களின் விவரங்கள்:

அட்டவணை A: பழைய T.S.எண்:61/2 படி பிளாட் எண்: 4, கதவு எண்:13-B, அழகிரி நகர் 2வது தெரு, வடபழனி, சென்னை-26ல் உள்ள காலியான வீட்டின் தனம் மற்றும் சொத்தின் அனைத்துப் பகுதியும், புதிய பட்டா T.S.எண்:61/39 படி பிளாக் எண்: 2, புலியூர் கிராமம், எழுப்பூர்-நுங்கம்பாக்கம் தாலுக்கா, சென்னை மாவட்டத்தில் உள்ள 3050 ச.அடி (அதாவது ஒரு கிரவுண்டு 650 ச.அடி.) எல்லைகள்: வடக்கு: 24அடி சாலை (அழகிரி நகர் 2வது தெரு). தெற்கு: பிளாட் எண்:11. கிழக்கு பிளாட் எண்:5. மேற்கு: பிளாட் எண்:3. சொத்தின் தோரிய அளவீடு: வடக்கு/தெற்குப் பகுதியில் கிழக்கே 61அடி. வடக்கு-தெற்குப் பகுதியில் மேற்கே: 61அடி. கிழக்கு-மேற்கு பகுதியில் வடக்கே: 50 அடி. கிழக்கு-மேற்கு பகுதியில் தெற்கே: 50 அடி. இந்த சொத்து கோடம்பாக்கத்தின் துணை பதிவு மாவட்டத்திலும், சென்னை சென்ட்ரலின் பதிவு மாவட்டத்திலும் அமைந்துள்ளது.

அட்டவணை B: (இதன்மூலம் தெரிவிக்கப்பட்ட சொத்து): 14.12.2005 தேதியிட்ட சொத்து ஆவண எண்: 5094/2005 படி Smt.G.Vijayalakshmi. க.பெயரைந்த திருகோவிந்தராஜுலு, அவர்களுக்கு சொந்தமான சொத்து. அட்டவணை A இல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தில் உள்ள மொத்த 3050 ச.அடி நிலத்தில் 367.42 ச.அடி பிரிக்கப்படாத பங்கு.

அட்டவணை C: (இதன்மூலம் தெரிவிக்கப்பட்ட சொத்து): Smt.G.Vijayalakshmi மற்றும் M/s.Himalaya Builders இடையே 04.1.2.2005 தேதியிட்ட (பதிவு செய்யப்படாத கட்டுமான ஒப்பந்தம்) கட்டுமான ஒப்பந்தத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தில் பிளாட் எண்: F-1 ல் (கட்டுமான ஒப்பந்தத்தின் படி பிளாட் எண்: F மற்றும் தற்போது F-1 எனக் குறிக்கப்பட்டுள்ளது) கட்டப்பட்ட 984 ச.அடி பகுதியுடன் அட்டவணை-A: ல் முதல் தளத்தில் அமைந்துள்ள பொதுவான பகுதியும் உள்ளடங்கியுள்ளது. Himalaya Homes என்று பெயரிடப்பட்ட சொத்து, சென்னை வடபழனி அழகிரி நகர் 2வது தெருவில் கதவு எண்:13-B ல் அமைந்துள்ளது. இந்த சொத்து சென்னை மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது.

இருப்பு விலை: ரூ.60,00,000/-	முன்வைப்புத் தொகை: ரூ.6,00,000/-	ஏல உயர்வு விலை: ரூ.50,000/-

வங்கிக்குத் தெரிந்த எமைகள் ஏதேனும் இருந்தால் - இல்லை.
இருப்பினும் ஏலதாரர்கள் தங்கள் சொந்த விசாரணையை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மின்-ஏல தேதி மற்றும் நேரம்: 20-02-2024 அன்று காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை.
சொத்துக்களின் ஆய்வு: 13-02-2024 அன்று காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை.

ஆர்வமுள்ள ஏலதாரர் மின்-ஏலம் முடிவதற்குள் MSTC-ல் மின்-ஏல முன்-வைப்புத் தொகையை டொபாசிட் செய்யலாம். முன்-ஏல முன்வைப்புத் தொகை MSTC-ன் வங்கிக் கணக்கில் பணம் செலுத்தப்பட்ட பிறகு மற்றும் மின்-ஏல இணையதளத்தில் அத்தகைய தகவல்கள் புதுபித்த பிறகே ஏலதாரர்களுக்கு கிரெடிட் வழங்கப்படும். https://www.mstcecommerce.com/auctionhome/ibapi/index.jsp. என்ற இணையதளத்தின் மூலம் ஆன்லைனில் மட்டுமே ஏலம் நடத்தப்படும். ஏலதாரர் பதிவு, மின்-ஏல தேதிக்கு முன்னதாக ஏலதாரர் மூலம் முன் கூட்டியே முடிக்கப்பட வேண்டும். இந்த செயல்முறைக்கு குறைந்தது இரண்டு அல்லது மூன்று வேலை நாட்கள் ஆகும்.

மின்-ஏல விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு பாரத் ஸ்டேட் வங்கியில் பாதுகாக்கப்பட்ட கடனாளியின் இணையதளத்தில் கொடுக்கப்பட்ட www.bank.sbi & https://www.mstcecommerce.com/auctionhome/ibapi/index.jsp இணைப்பைப் பார்க்கவும்.

இடம் : கோயம்புத்தூர். -ஒப்பம்- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
தேதி : 24-01-2024 பாரத ஸ்டேட் வங்கி.

தமிழ்நாடு அரசு
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை-28 தொலைபேசி எண் : 044-29864447

ஒப்பந்தப்புள்ளி அழைப்பு
(ந.க.எண்.21062/2023/மா.தி2, நாள் : 24.01.2024)

1. மூலதன மானிய நிதி (CGF) இயக்கம் மற்றும் மாநிலத்தல் நிதி (O&M) 2023-24 (Phase-VI) கீழ் நமிழகத்தில் உள்ள 4 மாநகராட்சிகள் மற்றும் 10 நகராட்சிகளில் மொத்தம் 23 எண்ணிக்கையான உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து இணையதளம் மூலமாக ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.
2. குறைந்த பட்சமாக ஒரு பணியின் மதிப்பு ரூ.4.20 லட்சம் மற்றும் அதிகபட்சமாக பணியின் மதிப்பு ரூ.613.00 லட்சம் ஆகும்.
3. ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமான விபரங்களை **www.tntenders.gov.in** இணையதள முகவரியில் பார்வையிடலாம்.
4. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை **www.tntenders.gov.in** இணையதள முகவரியில் 29.01.2024 முதல் 14.02.2024 வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
5. ஒப்பந்ததாரர்கள் முன் வரைதாய்வு கூட்டம் 07.02.2024 அன்று காலை 11.00 மணியளவில் சம்பந்தப்பட்ட மாநகராட்சிகள் / நகராட்சிகளில் நடைபெறும்.
6. ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : 14.02.2024 அன்று மாலை 03.00 மணி வரையில்.
7. சம்பந்தப்பட்ட மாநகராட்சிகள் / நகராட்சிகளில் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 14.02.2024 அன்று மாலை 3.30 மணி.
8. ஒவ்வொரு பணியின் மதிப்பீடு தொகை மற்றும் பேணவிழ் தொகை, ஒப்பந்தாரருக்கான தகுதி உள்ளிட்ட விபரங்களை ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தின் மூலம் அறியவும்

செ.ம.தொ.இ / 383 / ஒப்பந்தப்புள்ளி / 2024 **நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை - 28**

தமிழ் நாடு அரசு
ந.க.எண்.இ1/895/2023 **குடியாத்தம் நகராட்சி** நாள்: 24.01.2024
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

குடியாத்தம் நகராட்சி 2023-24-ம் ஆண்டு நுாலை இந்தியா திட்டத்தின் (SBM 2.0) கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட கீழ் குறிப்பிட்ட பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் ஆணையர் (பி) அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் வரும் 14.02.2024-ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அன்றைய தினமே மாலை 3.30 மணிக்கு நேரில் வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ அல்லது ரத்து செய்யவோ ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு. மேலை பற்றிய இதர விவரங்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில், அலுவலக தொலைபேசி எண்.04171-220051 மூலம் விசாரித்தும் மற்றும் ச.வெயில் முகவரி commr.gudiyattam@tn.gov.in மூலம் தெரிந்துக் கொள்ளலாம். மேலைக்கான மின்னணு ஒப்பந்த படிவத்தை 14.02.2024 பிற்பகல் மாலை 3.00 மணிவரை www.tntenders.gov.in என்ற வலைதளத்திலிருந்து இலவசமாக இறக்கம் செய்துக் கொள்ளலாம். மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி மின்னணு முறையில் கணினி மூலமாக மட்டுமே (e.submission) பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகளுக்கான டேவணித்தொகை வரைவோலையின் விவரத்தை கணினியில் பதிவு செய்து, 14.02.2024 பிற்பகல் 3.00 மணிக்குள் அசல் வரைவோலையினை நேரில் நகராட்சி அலுவலகத்தில் ஒப்படைத்தல் வேண்டும்.

வ. எண்	பணியின் விவரம்	மதிப்பீடு தொகை ரூ.	செலுத்த வேண்டிய டேவணித் தொகை ரூ.	பணி ஒப்பந்த காலம்
1	Reclamation of Existing Compost Yard Located at Erthangal Compost yard Removing Legacy Waste through Biomining in Gudiyatham Municipality	14500000/-	145000/-	180 நாட்கள்

ஒப்பந்ததாரர்கள் தங்கள் DSC பேரக்கனை **www.tntenders.gov.in** என்ற வலைதளத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
இடம்: நகராட்சி அலுவலகம், குடியாத்தம். செயதொஇ/405/ஒப்பந்தப்புள்ளி/2024 -ஆணையாளர், குடியாத்தம் நகராட்சி.

CSB Bank Trusted Heritage Smart Future

PUBLIC NOTICE ON AUCTION OF PLEDGED GOLD ORNAMENTS

The borrower/s in specific and interested bidders, in general, are hereby informed that on account of non-repayment of the Bank's dues by the borrowers as under despite the payment notice and recall/auction notice issued by the Bank, the gold ornaments pledged with the bank as security by the respective borrowers for the loans availed by them will be sold in public auction on "as is where is" and "non-recourse" basis through e-auction portal http://csbgold.auctiontiger.net on 5th February 2024 at 10.30 AM. The auction may be adjourned to any other later date at the discretion of the bank upon publication of the same in the Bank's notice board. The borrowers are hereby further informed that the gold ornaments will be disposed of by private sale if the public auction is not successful and if there is a further balance to be recovered thereafter, legal action will be initiated against the borrower/s for recovery of the balance amounts due to the bank.

S.No.	Branch Name	Account Name	Client ID	No of Acc.	Bal Outstanding as on 24-01-2024	Weight (grams)
1	CHENNAI - 2 MOUNT ROAD	BALAKRISHNAN P	3724901	1	2059796.2	904.1
2	PALLAVARAM	VIJAYAKUMAR RAVIKUMAR	3999310	1	73333	15.4
3	PALLAVARAM	DHARANI V	4539479	1	18491.4	3.9
4	PALLAVARAM	RAJESWARI SUNDARRAJAN	4639182	2	250409.45	52.2
5	PALLAVARAM	CHRISTOPHER RAJADURAI	7719788	1	238103.33	51.5
6	T. NAGAR	SURESHKUMAR	7407896	1	335324.75	68
7	GUINDY	MOHANAPRIYA VISWANATHAN	4639116	1	236681.83	47.9
8	GUINDY	KALPANA SHREE	7648387	1	113227.6	22.9
9	PADI	RAMA BALAJI	3822182	4	317657.83	67.5
10	PADI	SUBHASHINI S	4065354	1	1531568.42	264.12
11	PADI	GOPI PATTABI	7713706	1	156922.2	33.5
12	ANNA NAGAR	LAKSHMI S	4026765	1	146330.6	24
13	ANNA NAGAR	CHANDRAMOHAN C	4043068	1	1748758.25	289
14	ANNA NAGAR	VENKATESAN L B	4094212	1	597134	127
15	PERAVELLUR	AROCKIA ASWIN A	7569551	2	773645.82	202.6
16	PERAVELLUR	RAJU K	7688470	1	638731	137.4
17	TAMBARAM	SHANMUGAM VEERARAGAVAN	7487288	4	498335.18	104
18	KOLATHUR	SURESHKUMAR	7407896	1	105231.75	23.6
19	MEDAVAKKAM	SUBRAMANIAN	4361267	1	73705.25	16.2
20	MEDAVAKKAM	KALPANA M	4588714	2	344301.75	94.3
21	GUDUVANCHERI	SELVAGANAPATHY J	7535444	1	13187.5	3
22	GUDUVANCHERI	JAYA SRI G	7692303	2	249025.8	50.8
23	THIRUNINDRAVUR	K S LOGESH	4606388	2	228836.93	48.4
24	THIRUNINDRAVUR	MUNUSAMY E	7535875	1	108415.59	23.1
25	THIRUVANMIYUR	ELZIBETH MERY	4378515	1	35558.25	7.4
26	THIRUVANMIYUR	SARASWATHI N	7427135	1	282547.89	56.92
27	THIRUVANMIYUR	SOWMYA K	7436235	3	873827.39	180.9
28	THIRUVANMIYUR	MUTHURAMAN S	7718401	1	75149.56	15.7
29	CHENGALPATTU	KANNIYAPPAN SUBRAMANIAN	7686335	2	341664.48	71.4
30	REDHILLS	SARATHKUMAR K	4639132	1	95403.49	20
31	KANCHIPURAM	MAGESH S	7594998	2	1063410.25	227.2
32	SIRKALI	NANDINI	4441675	1	44012	11.5
33	SIRKALI	FARJANA BANU	4455423	3	231106.26	48.65
34	PANRUTI	PRAKASH K	4553913	2	143886.83	31.9
35	PANRUTI	V ASHOK KUMAR	4625719	3	260276.28	53.8

For more details/account wise information borrowers/interested bidders may contact respective branches and for participating in the auction, please visit/login to the e-auction portal http://csbgold.auctiontiger.net

Authorised Officer
CSB Bank **Chennai | 26 January 2024**

டிவிஎஸ் ஹோல்டிங்